<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். இலால்குடி.</u>
<u>அ.வ.எண்.349/2018</u>
<u>01.06.2026</u>

2026 ம் ஆண்டு ஜுன் 01 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1969—ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது ஏற்பாட்டின்படி) திரு.V.சரவணன், உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==========================================================

| | |
|---|---|
| பெயர் = நித்தின்ராஜன் | தகப்பனார் பெயர்= கோவிந்தராஜன் |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==========================================================

**<u>DW 2 முதல் விசாரணை</u>**

நான் பஞ்சாப் நேஷனல் வங்கி அலுந்தளைப்பூர் கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன். சாட்சி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொன்னுசாமியின் மனைவி பரமேஸ்வரி என்பவருக்கு எங்கள் வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு உள்ளது என்றால் சரிதான். ஒரு நகை கடனும் உள்ளது. **மேற்படி பரமேஸ்வரியின் வங்கி கணக்கு அடங்கிய Statement of Account 18.04.2012 — 24.05.2026 வரை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் <u>சா.சா.ஆ.1</u> ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பரமேஸ்வரியின் வங்கி கணக்கிற்கு பல்வேறு தேதிகளில் அரசாங்கத்திலிருந்து பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக 16.03.2017 ல் ரூ.5670/— அரசாங்க கணக்கிலிருந்து வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தொகை அரசாங்கத்தின் எந்த துறையிலிருந்து வரவு வைக்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிட்ட துறையை விசாரணை செய்தால் தான் தெரியும் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை**

1. மேற்படி பரமேஸ்வரி எங்களது வங்கி கிளையில் மேற்சொன்ன காலக்கட்டத்தில் விவசாய கடன் எதுவும் பெற்றுள்ளாரா என்றால் இல்லை. எங்களுடைய வங்கி கிளை ஆளுகைக்கு உட்பட்ட விளை நிலங்களான நஷ்ட ஈடு எங்களது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என்றால் மேற்படி சேமிப்பு கணக்கை கணக்கு வைத்திருக்கும் நபர் எந்த துறையில் கொடுத்தாலும் அந்த துறையிலிருந்து வரவு வைக்கப்படும். மேற்படி சேமிப்பு கண்கிற்கு வரவு வைக்கப்பட்ட தொகைகளானது எந்த கிராம சர்வே எண் தொடர்புடைய நிலம் என்று சொல்ல முடியாது என்றால் சரிதான்.

2. 16.03.2017 ம் தேதி ரூ.5670/– எந்த நிலத்திற்காக வரவு வைக்கப்பட்ட தொகை என்ற விவரம் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தொகை மேற்படி அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களுக்காக வரவு வைக்கப்பட்டுள்ளதாக பரமேஸ்வரி சொன்னதின் பேரில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அழைப்பாணை கிடைக்கபெற்ற பின்னர் எந்த துறையிலிருந்து மேற்படி தொகை வரவு வைக்கப்பட்டது என்ற விவரத்தை விசாரணை செய்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

(சாட்சிக்கு தமிழ் மொழி படிக்க தெரியாது என்ற காரணத்தினால் திறந்த நீதிமன்றத்தில் மாவட்ட உரிமையியல் நீதிபதியால் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு அவரது பதில் பெறப்பட்டு தமிழில் சாட்சி விசாரிக்கப்பட்டது)

**Signed,**

நித்தின்ராஜன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.